https://lankaeducations.blogspot.com




**01 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தினை தரப்பட்ட புள்ளிக் கோட்டின் மீது எழுதுக**

01. வணிகம் என்பது "ஒரு பரந்த செயற்பாட்டுக் கருமமாகும்". வணிகத்துடன் தொடர்புடைய சில வாக்கியங்கள் வருமாறு

1. தேவைகள் 2. இடர் 3. சந்தைப்படுத்தல் 4. விருப்பம் 5. உற்பத்திப் பொருள்

6. எண்ணங்கள் 7. இலாபம் 8. கேள்வி

இங்கு குறிப்பிடப்பட்டவற்றுள் வணிக எண்ணக்கருக்கள் எத்தனை

1. 3 2. 4 3. 5 4. 6 5. 7 (.....)

02. பின்வருவனவற்றுள் தவறான கூற்றினைத் தெரிவு செய்க

1. பணத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் ஆரம்பப் படிமுறை பண்டமாற்று ஆகும்
2. வர்த்தகத்தின் பிரதான பிரிவு வியாபாரமாகும்
3. வணிகமொன்றின் தோற்றத்திற்கு அடிப்படையானவை தேவைகளும், விருப்பங்களும் ஆகும்
4. வணிகத்தின் அடிப்படையில் ஒன்று மிகை உற்பத்தி ஆகும்
5. நேரில் உற்பத்தி ஒரு வணிக ரீதியான உற்பத்தி ஆகும் (.....)

03. பின்வருவனவற்றுள் வணிகமொன்றின் அடிப்படைகளுக்குரிய மூலங்களை ஒழுங்குமுறையில் கொண்ட விடைத்தொகுதி

1. பண்டமாற்று, பணப்பரமாற்றம், கைத்தொழில்புரட்சி, தகவல்தொழில்நுட்பம்
2. வாடிக்கையாளர், தேவை, விருப்பம், உற்பத்திப் பொருள், இலாபம்
3. பண்டமாற்று, பணப்பாவணை, தகவல்தொழில் நுட்பம், கைத்தொழில்புரட்சி
4. நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி, வியாபாரம், வர்த்தகம்
5. தேவை, விருப்பம், இலாபம், உற்பத்திப் பொருள் (.....)

04. உற்பத்திகள் தொடர்பான இலட்சணங்களென கூற முடியாதது

1. மனித தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்தல் 2. பௌதிகத் தன்மை கொண்டவை
3. விலைப் பெறுமானம் உடையது 4. உரிமைத் தத்துவம் உடையது
5. காரணிகளின் சேர்க்கையால் உருவாகியது (.....)

https://lankaeducations.blogspot.com

05. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் படி கம்பனிகள் தொடர்பான சில காரணிகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஓரினத் தன்மையற்ற காரணிகளைக் கொண்ட தொகுதி எது

1. தனிக்கம்பனி, பொதுக்கம்பனி, கரைகடந்த கம்பனி
2. முன்விபரணம், கடன் தீர்க்கும் சான்றிதழ், தொகுதிக் கடன்
3. சட்ட ஆளுமை, வரையறுத்த பொறுப்பு, பங்கு மூலதனத்தினைக் கொண்டது
4. குறைந்தது 2 பங்குதாரர் இலாபத்தினைப் பகிர முடியாது, சேவை நோக்கமுடையது
5. குறைந்தது ஒரு பங்குதாரர், உச்ச எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை, குறைந்தது ஒரு இயக்குனர்

(.....)

06. கூட்டுறவு அமைப்புடன் தொடர்புடைய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. சுயாதீனமான அமைப்பொன்றாக இருத்தல் 2. பங்குகளின் பெறுமதி மாறாது
3. தனியார் துறையைச் சார்ந்த அமைப்பு 4. அங்கத்தவர்களின் சம உரிமை
5. பதிவு செய்தல் கட்டாயமானது 6. பொதுத்தேவை, எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கியது
7. அங்கத்தவர்கள் ஒருவருக்கு ஒரு வாக்கு மட்டும் வழங்கப்படும்

கூட்டுறவு அமைப்பின் விசேட பண்புகளை உள்ளடக்கிய கூற்று எத்தனை

1. 3 2. 4 3. 5 4. 7 5. 6 (.....)

07. தனது தொழில் முயற்சியை வணிகப்பெயராகக் கொண்ட வணிக அமைப்பு

1. தனிவியாபாரம் 2. பங்குடமை 3. வரையறுத்த கம்பனி 4. கூட்டுத்தாபனம்
5. அரச திணைக்களம் (.....)

08. பதிவு செய்தலுக்கும் சட்டத்தின் முன் தனிமனித அந்தஸ்துக்கும் இடையில் நேர்த் தன்மை ஒன்றை காணமுடியாததாக இருப்பது

1. கம்பனியும் கூட்டுத்தாபனமும் 2. கூட்டுறவும் கூட்டுத்தாபனமும் 3. பங்குடமையும் கம்பனியும்
4. பங்குடமையும் தனிவியாபாரமும் 5. மேற்கூறிய ஒன்றுமல்ல (.....)

09. இலங்கையில் முதலாவதாக உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம் எது

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 2. நுகர்வோர் கூட்டுறவுச்சங்கம்
3. கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் 4. விவசாய உற்பத்தி கூட்டுறவுச்சங்கம்
5. பண்ணை, தென்னை கூட்டுறவுச் சங்கம் (.....)

10. குரோனர், ரிங்கிற், டொலர், யுவான், ராகா போன்ற நாணய அலகுகளுக்கு பொருத்தமான நாடுகளை ஒழுங்காகக் காட்டும் தொகுதி எது

1. மலேசியா, நோர்வே, சிங்கப்பூர், சீனா, பங்காளதேஸ்
2. நோர்வே, மலேசியா, சிங்கப்பூர், சீனா, பங்காளதேஸ்
3. சீனா, பங்காளதேஸ், சிங்கப்பூர், நோர்வே, மலேசியா
4. பங்காளதேஸ், நோர்வோ, மலேசியா, சிங்கப்பூர், சீனா
5. சிங்கப்பூர், பங்காளதேஸ், நோர்வோ, மலேசியா, சீனா (.....)

https://lankaeducations.blogspot.com




**11 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தினை தரப்பட்ட புள்ளிக் கோட்டின் மீது எழுதுக**

11. சரியான கூற்றைத் தெரிவு செய்க

1. அனைத்துக் காசோலைகளும் செல்லுபடியாகும் காலம் 6 மாதங்களாகும்
2. நடைமுறைக் கணக்கொன்றில் மட்டுமே காசோலையை வைப்பிலிட முடியும்
3. எல்லாக் காசோலையினதும் குறுக்குக்கோட்டினை கட்டளை இடுபவருக்கு மட்டுமே நீக்கம் செய்ய முடியும்
4. வங்கி மேலதிகப் பற்றுக்கு கட்டாயமாக பிணை தேவைப்படுகின்றது
5. நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு கட்டாயமாக முகாமையாளரின் அனுமதி தேவைப்படும் (.....)

12. காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு நட்டம் ஏற்பட்டதற்காக நட்டஈடு வழங்கப்படமாட்டாது எனக் கூறும் காப்புறுதிக் கோட்பாடு

1. நம்பிக்கைத் தத்துவம் 2. உரிமைத் தத்துவம் 3. நட்ட ஈட்டுத் தத்துவம்
4. பங்களிப்புத் தத்துவம் 5. அண்மைக்காரணத் தத்துவம் (.....)

13. தொடர்பாடல் ஒன்று வினைதிறனாகுவது

1. சரியான தகவல்களை வழங்கும் போது 2. தகவல் சரியான நேரத்தில் சென்றடையும் போது
3. தகவல் சரியான நேரத்தில் அனுப்பப்படும் போது 4. சிறந்த பின்னூட்டல ஒன்றைப் பெறும் போது
5. தகவலைப் பெறுபவர் சரியாகப் பயன்படுத்தும் போது (.....)

14. இலங்கை பயணிகள் போக்குவரத்து தொடர்பான சட்ட விதிகள், ஒழுங்குமுறைகள் என்பவற்றுக்கு பொறுப்பான நிறுவன அமைப்பு

1. மத்திய போக்குவரத்துச் சபை 2. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
3. மோட்டார் போக்குவரத்து பதிவுத் திணைக்களம் 4. இலங்கை மோட்டார் போக்குவரத்துச் சங்கம்
5. மத்திய கேள்வுப் பணியகம் (.....)

15. களஞ்சியப்படுத்தல் செயல்முறையாக கருதப்படாதது

1. இருப்புக்களைப் பெறுதல் 2. பரிசோதித்தல் 3. தரத்தினைப் பேனுதல்
4. இருப்பு வைத்தல் 5. இருப்புக்களை விநியோகம் செய்தல் (.....)

https://lankaeducations.blogspot.com

16. இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறும் முறைகளும் உதாரணங்களும் சரியாகக் கொண்ட தொகுதி

1. C 2 G — A -- பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தல்
2. G 2 B — B - வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை
3. B 2 C — C - இலத்திரனியல் சில்லறை வியாபாரம்
4. B 2 G — D - ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்துதல்

1. 1 - B, 2 – C, 3 – A, 4 – D  2. 1 – A, 2 – B , 3 – C , 4 - D  3. 1 – C , 2 – B , 3 – A, 4 - D
5. 1 – D , 2 – A, 3 – C , 4 – B  5. 1 – B , 2 – A, 3 – C , 4 – D  (.....)

17. சரியான கூற்று, கூற்றுக்களை தெரிவு செய்க

A) பயனுறுதி என்பது சரியாகத் தெரிவு செய்வதாகும்

B) செய்ய வேண்டிய கருமங்களை சரியாகச் செய்தல் வினைதிறன் எனப்படும்

C) நிறுவனமொன்றின் விரிவான இலக்கொன்றுக்கான பெறுபேறானது மிக உறுதியான முறையில் வெளிப்படுத்தப்படுமாயின் அதனை நிறுவன நோக்கம் எனலாம்.

1. A, B மட்டும் சரியானவை  2. B மட்டும் சரியானது  3. A, B , C யாவும் சரியானவை
4. B, C மட்டும் சரியானவை  5. A மட்டும் சரியானது  (.....)

18. தீ காப்புறுதிக்கு இணைந்ததாகக் காணப்படும் காப்புறுதி வகையாகக் கருதப்படுவது

1. கடலபாயக் காப்புறுதி  2. மோட்டார் விபத்துக் காப்புறுதி  3. வெள்ள அபாயக் காப்புறுதி
4. பொதுப் பொறுப்புக் காப்புறுதி  5. மேற்கூறிய அனைத்தும்  (.....)

19. ஹென்ரி மின்ஸ்பேக்கின் கருத்துக்கமைய தகவலளிப்பு வகிபாகம் என்பதன் கீழ் முகாமையாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய வகிபாகம் எதுவென அடையாளங் காண்க

1. மேலதிகாரி  2. தலைவர்  3. தொடர்புகளைப் பேணுபவர்  4. நடுநிலையாளர்
5. கண்காணிப்பாளர்  (.....)

20. சந்தைப்படுத்தலில் வியாபாரக் குறியின் பிரதான பணியாகக் கருதப்படுவது

1. நினைவூட்டல்  2. அறிவு வழங்கல்  3. பெயரை உச்சரித்தல்
4. தர தலைமைத்துவம் பேணல்  5. வேறுபடுத்துதல்  (.....)

https://lankaeducations.blogspot.com



**21 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தினை தரப்பட்ட புள்ளிக் கோட்டின் மீது எழுதுக**

21. ஒரு சந்தைப்படுத்தும் நிறுவனம் விலையிடலை மேற்கொள்ளும் போது சில நோக்கங்களைக் கருத்திற் கொள்கின்றது. இவற்றுள் பிரதான நோக்கம் என எதனைக் கருத முடியும்

1. சந்தையில் நீண்ட காலம் நிலைத்திருத்தல்
2. சந்தைத் தலைமைத்துத்தை ஏற்படுத்தல்
3. நிகழ்கால இலாபத்தினை உச்சப்படுத்தல்
4. வாடிக்கையாளரை திருப்திப்படுத்தல்
5. உற்பத்திக் கிரயங்களை மீளப்பெறல்

(.....)

22. மனிதவள முகாமைத்துவத்தின் தொழில் விபரணத்திலும் தொழில் நியமத்திலும் பொதுவாகக் காணப்படும் முக்கியமான தகவலாக இருப்பது

1. கருமங்களின் தன்மையாகும்
2. பதவி வகிப்பவரின் தகைமையாகும்
3. அனுபவங்களாகும்
4. பதவியின் பெயராகும்
5. சம்பளத் திட்டமாகும் (.....)

23. தொழிற்சங்க நடவடிக்கைகளாக எதனைக் கூற முடியாது

1. சட்டப்படி வேலை செய்தல்
2. வேலைகளில் ஈடுபடாதிருத்தல்
3. உண்ணாவிரதம்
4. மெதுவாக வேலை செய்தல்
5. வாயிற் கதவுகளை மூடுதல் (.....)

24. நிதி விகிதங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. நடைமுறை விகிதம்
2. வட்டி காப்பு விகிதம்
3. முதலீட்டுக்கான வருவாய் விகிதம்
4. இருப்பு புறள்வு விகிதம்
5. உரிமை மூலதனம் மீதான வருவாய் விகிதம்
6. கடன்பட்டோர் புறள்வு விகிதம்
7. கடன் உரிமை விகிதம்
8. மொத்தச் சொத்து புறள்வு விகிதம்

மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் செயற்பாட்டு விகிதங்கள் எத்தனை

1. 2
2. 3
3. 4
4. 5
5. 6

(.....)

https://lankaeducations.blogspot.com

25. தொழிலுக்கான வெற்றிடத்தினை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான ஊழியரைத் தெரிவு செய்வதற்கு பின்பற்றும் நுட்பமாகவும் முதல் படியாகவும் கருதப்படுவது

1. நேர்முகப்பரீட்சை 2. மனிதவளத் திட்டமிடல் 3. எழுத்துப்பரீட்சை

4. விண்ணப்பங்களை மதிப்பிடல் 5. வைத்தியப் பரிசோதனை (.....)

26. நடைமுறை, நடைமுறையல்லா சொத்துக்களில் முதலீடு செய்வதற்கு தேவையான வசதியினை திரட்டுவது தொடர்பான தீர்மானம் எவ்வாறு அழைக்கப்படும்

1. முதலீட்டுத் தீர்மானம் 2. நிதித் தீர்மானம் 3. நீண்டகால நிதித் தீர்மானம்

4. குறுங்கால் நிதித்தீர்மானம் 5. நிதி முகாமைத் தீர்மானம் (.....)

27. மனிதவள முகாமையை பிரதான பணிகளில் ஒன்றாக கருதப்பட முடியாதது எது

1. கொடுப்பனவுகளும் நலன்புரி வசதிகளும் வழங்குதல் 2. பயிற்சியும் அபிவிருத்தியும்

3. ஊழியர் அசைவுகள் 4. தொழில் ரீதியான திருப்தியை ஏற்படுத்தல்

5. கைத்தொழில் தொடர்புகளை பேனுதல் (.....)

28. பின்வரும் நிதியளிப்பு மூலங்களுள் கம்பனியொன்றின் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக்கு சவாலாக இருக்கக் கூடியது

1. தொகுதிக்கடன் வழங்குதல் 2. முன்னுரிமைப் பங்கு வழங்குதல் 3. சாதாரண பங்கு வழங்கல்

4. வணிகத் தாள் வழங்கல் 5. கடன் காரணிப்படுத்தல் (.....)

29. வணிகத்தின் தன்மை, உற்பத்தியின் தன்மை, வாடிக்கையாளனுக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக விபரிக்கும் வணிகத் திட்டத்தின் ஒரு பகுதி எவ்வாறு அழைக்கப்படும்

1. செயற்பாட்டுத் திட்டம் 2. மனிதவளத் திட்டம் 3. செயற்றிட்ட அறிக்கை

4. வணிக விபரணம் 5. வணிகப்பகுப்பாய்வு (.....)

30. சரியான தரவுகளைத் தெரிவு செய்க

அ) பயன்படுத்தப்படுகின்ற உள்நாட்டு சர்வதேச நியமங்கள், தொழிற்சாலை அமைவிடம், உள்ளடங்கிய வணிகத் திட்டத்தின் ஒரு பகுதி செயற்பாட்டுத் திட்டமாகும்

ஆ) வணிகத்தின் பெயரும் முகவரியும் அதன் நோக்கம், கட்டமைப்பு , பொருட்கள் சேவைகள் தொடர்பான விபரங்கள் சந்தைப் படுத்தல் திட்டத்தில் ஆராயும் விடயங்களல்ல

இ) வணிகம் தொடர்பான முகாமைத்துவ திறன், பதவிகள், பொறுப்புக்கள், அமைப்பு வரைபடம் பற்றி விளக்க உதவும் ஒரு பகுதி நிறைவேற்றுச் சுருக்கம் எனப்படும்

1. அ, ஆ மட்டும் சரியானது 2. ஆ மட்டும் சரியானது 3. அ, ஆ, இ யாவும் சரியானது

4. ஆ, இ மட்டும் சரியானவை 5. அ மட்டும் சரியானது (.....)

https://lankaeducations.blogspot.com




**31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையினை தரப்பட்ட புள்ளிக் கோட்டில் எழுதுக**

31. அ) வணிகமானது தனது உற்பத்தியை மீண்டும் சமூகத்திற்கு வழங்குவது ..... உற்பத்தி ஆவதுடன் அதன் பிரதான நோக்கம் ..... ஆகும்.

ஆ) தனியார் சிறப்புத்தேர்ச்சி ஏற்படக் காரணம் ..... ஆகவும் கைத்தொழில் புரட்சியினால் தோன்றியது ..... உற்பத்தியாகவும் கொள்ளப்படும்

32. அ) புதிய கருத்துக்களை உருவாக்கும் ஆற்றல் ..... எனவும் எண்ணங்களை செயல் வடிவமாக்குதல் ..... எனவும் அழைக்கப்படும்

ஆ) பதிப்புரிமையை அரசு வெளியிடுவது ..... ஊடாகவும் பதிப்புரிமை தினமாக ..... ம் பிரகடனப்படுத்தப்படுகிறது

33. அ) பூகோள அடிப்படையில் வியாபாரமானது ..... ..... ஆகவும் நோக்கத்தின் அடிப்படையில் வியாபாரமானது ..... ..... ஆகவும் வகைப்படுத்தப்படுகின்றது

ஆ) சமூக கலாச்சார காரணிகள் ..... சூழல் காரணிகளுடன் நேரடித் தொடர்புடையதாக காணப்படும். வாடிக்கையாளரின் நிதிப்பலம் வணிகத்திற்கு ..... .....ஆகக் காணப்படும்

34. அ) குறைந்த அங்கத்துவ நாடுகளைக் கொண்ட வியாபார ஒப்பந்தம் ..... ஆவதுடன் இதில் அமெரிக்கா மற்றும் ..... ..... ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றது

ஆ) 1975ம் ஆண்டில் ..... எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது ஆசிய பசுபிக் வியாபார ஒப்பந்தம் என பெயர் மாற்றப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

35. அ) ஒரு நாட்டின் சட்டமுறை பணத்தினை இன்னொரு நாட்டின் சட்டமுறைப் பணத்துடன் பரிமாற்றம் செய்யும் விகிதம் ..... என அழைக்கப்படுவதுடன் சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அலுவலகம் ..... நாட்டில் அமைந்துள்ளது

ஆ) பாடசாலை ஒன்றினுள் பாடம் ஆரம்பிக்கும், முடிக்கும் நேரத்தினுள் மாணவர், ஆசியருக்கு அறிவிப்பதற்கு பயன்படுத்தப்படும் மணியொலி ஒரு ..... என அழைக்கப்படுவதுடன் அது ..... தொடர்பாடல் முறையாகவும் கருதப்படும்.

https://lankaeducations.blogspot.com

36. அ) ஒழுங்கமைப்பின் உயர் முகாமையிலிருந்து கீழ்மட்ட முகாமை வரை முறிவடையாது செல்லும் அதிகார வழி …….. எனப்படுவதுடன் ஒரு ஊழியர் ஒரு மேற்பார்வையாள ருக்கு மாத்திரம் பொறுப்புக் கூற வேண்டும் என்ற கோட்பாடு ……. எனப்படும்

ஆ) முகாமைத் தொழிற்பாடுகளில் ஆரம்பத் தொழிற்பாடு …… ஆகவும் மனித வளத்தினை மட்டும் உள்ளடக்கிய தொழிற்பாடு ……. ஆகவும் கருதப்படும்

37. அ) சந்தைப்படுத்துவோருக்கு வழிகாட்டுவதும் விற்பனையாளர்களை மையமாகக் கொண்ட சந்தைப் படுத்தல் எண்ணக்கரு ,……ஆகவும் தனிப்பட்ட நுகர்வோரை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு …….. எனவும் அழைக்கப்படும்

ஆ) விற்பனையை அதிகரிக்கவும் நுகர்வோரைத் தூண்டவும் சந்தைப்படுத்துவோரால் மேற்கொள்ளப் படும் தந்திரோபாயம் ……. எனவும் குறுங்காலத்தில் விற்பனையை அதிகரிக்க மேற்கொள்ளப்படும் மேம்படுத்தல் உபாயமாக ……..ம் காணப்படுகின்றது

38. அ) நிதிக்கருவிகளின் முதிர்வுக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு நிதிச் சந்தையானது …… ……. என வகைப்படுத்தப்படும்

ஆ) கம்பனி தனது குறுங்கால திரவத்தேவையை பூர்த்தி செய்வதற்காக விநியோகம் செய்யும் ஆவணம் …… என்பதுடன் நேர் நிதியானது …….. …… என இரு நிதி மூலங்களைக் கொண்டது

39. அ) ஊழியர்களின் முறையற்ற ……. …….. தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதற்கான அமைப்பு தொழில் நியாய சபை ஆகும்.

ஆ) தொழிற்சங்கமொன்று …….. நிறுவனத்தில் பதிவு செய்யப்படுவதுடன் பொலிஸ் மற்றும் ……. ……. தரப்பினர்கள் தொழிற்சங்கமொன்றை உருவாக்க முடியாது

40. அ) நிறுவனமொன்றின் வருடாந்த நிலையான கிரயம் 40,000ரூபா. அலகொன்றுக்கான மாறும் கிரயம் 12 ரூபா. வருடாந்த உற்பத்தி அலகுகள் 8,000. மொத்தக் கிரயத்தின் மீது இலாப எல்லை 200வீதமாக இருக்கத்தக்கதாக உற்பத்தி அலகுக்கான விலை தீர்மானிக்கப்படுவதாகக் கருதினால் அலகொன்றின் விற்பனை விலை யாது ……

ஆ) சக்தி சன் வணிகம் பாடசாலை மாணவர்களுக்கான ஆடம்பரமான புத்தகப் பைகளை உற்பத்தி செய்கின்றது. ஒரு பையின் மொத்தக் கிரயம் 320ரூபா. இந்நிறுவனம் விற்பனை விலையில் 20 வீதம் இலாபம் வைத்து விற்பனை செய்யத் தீர்மானித்தது. அலகொன்றின் விற்பனை விலை யாது

……..

41. அ) மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் மொத்த சில்லறை வியாபாரத்தின் வகுதிகளைக் குறிப்பிடுக

……..

……..

ஆ) மத்திய வங்கியின் அறிக்கையின்படி இரண்டாம் நிலை வணிகத்தின் இரு கூறுகளையும் குறிப்பிடுக

……..

……..

42. அ) தொடர்பாடலின் மூலக்கூறுகள் வருமாறு

A – நலம் நலமறிய ஆவல் B – கடிதம் C – நலமாக இருப்பவர் பிருந்தன்

D – நலம் விசாரிப்பவர் ரீத்தி E – பதில் கடிதம் வரைதல் F – பிரிந்தன் சந்தோசப்படல்

இதனை ஒழுங்குபடுத்துக

……

ஆ) காசோலையில் காணப்படும் இலக்கங்களை ஒழுங்கில் குறிப்பிடுக

……..

……..

43. அ) பின்வரும் விசேட வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி பெற வேண்டிய இடங்களைக் குறிப்பிடுக

| வணிக நடவடிக்கைகள் | அனுமதி பெறவேண்டிய இடங்கள் |
|---|---|
| அச்சகத் தொழில் | |
| பேக்கரித் தொழில் | |
| சர்வதேசப் பாடசாலை | |
| உற்பத்தித் தொழிற்சாலை | |

ஆ) சர்வதேச வியாபாரம் தொடர்பாக பின்வருவனவற்றின் நோக்கங்கள் எவை

1. எதிர்க்கணியப் பட்டியல்

……

2. எதிர் வர்த்தகம்

……

44. அ) பின்வரும் ஆவணங்கள் யாருக்கு முக்கியத்துவம் பெறுகின்றது எனக் அடையாளமிடுக (√)

| ஆவணங்கள் | ஏற்றுமதியாளன் | இறக்குமதியாளன் |
|---|---|---|
| இறக்குமதிக்குறிப்பு | | |
| கப்பல் தளச்சீட்டு | | |
| நட்ட ஈட்டுக் கடிதம் | | |
| தரவாணை | | |

ஆ) இறக்குமதி நடைமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன

மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மா
பළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර පළාත பළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, නැගෙනහිර
Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern Province Provincial Department of Education, Eastern

A - பொருளைப் பெற்றுக்கொள்ளல் B – கொடுப்பனவு செய்தல் C – கட்டளை சமர்ப்பித்தல் D - இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெறல் E – விலைக்கூற்றினைப் பெறல்

F – விலை விசாரணைக் கடிதம் அனுப்புதல் G – வழங்குனர் ஒருவரைத் தெரிவு செய்தல்

இறக்குமதி நடைமுறைகளைச் சரியாக ஒழுங்குபடுத்தும் ஆங்கில எழுத்துக்களைக் குறிப்பிடுக

……

45. அ) பாடசாலை அதிபரினால் பின்வரும் தொழிற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. நெறிப்படுத்தல் என்னும் முகாமைத்தொழிற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றுக்கு பொருத்தமான கூறுகளை எழுதுக

1. பாடசாலைக்கு வருகை தரும் அதிகாரிகளை வரவேற்றல்
……

2. காலைக் கூட்டத்தில் உரையாற்றுதல்
……..

3. மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டுதல் ……

ஆ) பொருத்தமான தலைமைத்துவ சாயலைக் குறிப்பிடுக

1. சேவை நோக்கமுள்ள நிறுவனத்தில் ……

2. இலாப நோக்கமுள்ள நிறுவனத்தில் ……

3. ஊழியருக்கு சுதந்திரத்தினை வழங்கும் தலைமைத்துவம் ……

4. ஊழியர்களைக் கட்டுப்படுத்தாது அவர்களைத் தூண்டும் தலைமைத்துவம்

……..

46. அ) உற்பத்தி முறையொன்றைத் தெரிவு செய்யும் போது உற்பத்தி முகாமையாளர் கவனம் செலுத்தம் நான்கு காரணிகளைத் தருக

1. ……2. ……..

3. …… 4. ……..

ஆ) பின்வரும் பொருள் உற்பத்திக்குப் பொருத்தமான தொழிற்சாலை தள அமைவுத் திட்டத்தைக் குறிப்பிடுக

1. தளபாட உற்பத்தி - ……..

2. மோட்டார் வாகனம் ……..

3. ஆடை உற்பத்தி …….

4. விமான உற்பத்தி …….

47. அ) பொருளொன்றை அல்லது சேவையொன்றை சந்தையில் நிலைத்திருக்கச் செய்வதற்கான தந்திரோபாயங்கள் இரண்டு தருக

……

……

ஆ) சந்தைத் துண்டமாக்கலின் அடிப்படைகள் நான்கும் எவை

1. ……2. ……..

3. …… 4. ……..

48. அ) பங்குச்சந்தையில் கம்பனிகளைப் பட்டியல் படுத்துதல் தொடர்பில் பிரதான பலகையில் (Main Board) பட்டியல்படுத்துவதற்கு நிறைவேற்றவேண்டிய தேவைப்பாடுகள் நான்கு தருக

……

……

……

ஆ) கம்பனியொன்றின் இலாபத்தன்மை விகிதங்கள் நான்கு தருக

1. ……2. ……..

3. …… 4. ……..

49. அ) தொழில் வெற்றிடத்திற்கு பொருத்தமான ஊழியர்களை தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காணிகள் நான்கு தருக

1. ……2. ……..

3. …… 4. ……..

ஆ) மனித வள முகாமைக் கருமத்தின் மதிப்பீட்டு நியமங்கள் நான்கும் எவை

1. ……2. ……..

3. …… 4. ……..

50. அ) இலங்கையில் அரச துறைக்கு ஊழியர்களை சேர்த்துக்கொள்ளும் போது பெருமளவில் பயன்படுத்தப்படுகின்ற தெரிவு நுட்ப முறைகள் இரண்டு தருக

……..

……..

ஆ) வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் நிதிக்கட்டுப்பாட்டு கருவிகள் மூன்றினையும் தருக

……..

……..

……..